# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி(வரை), தருமபுரி

ந.க.எண்: 129/2014 வளர்ச்சி

நாள்: 14.05.2019

பொருள் : வருமான வரி - 2019-20 ஆம் நிதியாண்டு - பின்பற்றப்பட வேண்டிய தனிநபர் வருமானம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் TDS பிடித்தம், TDS செலுத்துதல் மற்றும் TDS காலமுறை அறிக்கைகள் தாக்கல் செய்தல் - வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது - தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி சுற்றறிக்கை C.No.3737/ATPS/2019-20 நாள்: 03.04.2019.

********

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் சுற்றறிக்கையில், 2019-20 ஆம் நிதியாண்டிற்கு (மதிப்பீட்டு ஆண்டு 2020-2021) பின்பற்றப்பட வேண்டிய தனிநபர் வருமான வரி, வங்கியின் பல்வேறு செலவினங்கள் மீது பிடித்தம் செய்ய வேண்டிய TDS, பிடித்தம் செய்யப்பட்ட TDS தொகையை வருமான வரித் துறைக்கு செலுத்துவது மற்றும் TDS தொடர்பாக தாக்கல் செய்ய வேண்டிய காலமுறை அறிக்கை தொடர்பான வருமான வரி சட்ட நடைமுறைகள் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வையில் காணும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தலைமையகம் மற்றும் அனைத்து கிளைப் பணியாளர்கள், TDS பிடித்தம் செய்வது, வருமான வரி கணக்கில் TDS செலுத்துவது மற்றும் TDS தொடர்பான காலமுறை அறிக்கைகளை உரிய காலத்தில் தாக்கல் செய்வது தொடர்பான நடைமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு செயல்படாத காரணத்தால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு தொடர்புடைய தலைமையக பணியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கிளைப் பணியாளர்களே முழு பொறுப்பாக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :-

TNSCB சுற்றறிக்கை

ஒம்/கி.ரேணுகா

இணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர்

பெறுதல் :-

1. அனைத்து கிளை மேலாளர்கள் மற்றும் கிளை பணியாளர்கள்
2. அனைத்து பிரிவு மேலாளர்கள், தலைமையகம்.

நகல் :-

1. பொது மேலாளர்/
2. முதன்மை வருவாய் அலுவலர்/
3. இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேசைக்கு.

14/5/19

/உண்மை நகல்/

மேலாளர் (வளர்ச்சி)